# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

## OS. No. 123/2020 நாள்.03.02.2026

DW1- திரு.அப்துல் ஹக்கீம் , த/பெ. திரு.ஹயாத்கான்

வாதி தரப்பில் குறுக்குவிசாரணை

தாவா சொத்து என் அப்பாவிற்கு சொந்தமாகயிருந்ததா என்றால் இருந்தது. அந்த சொத்தைதான் என் அப்பா என் பெயருக்கு 23.11.2009இல் பதிவு செய்யபட்ட செட்டில்மெண்ட் பத்திரம் மூலம் எனக்கு எழுதி வைத்தார் என்றால் ஆமாம். வாதி முருகானந்தத்திடம் மேற்படி சொத்தைதான் கிரையம் செய்து கொடுப்பதற்காக நான் ஒப்பந்தம் போட்டு'கொண்டேன் என்றால் இல்லை. 59/1987 வழக்கு என் அப்பாவுடைய சகோதரரும், அவருடைய மகனும் என் அப்பாவுக்கு எதிராக தாக்கல் செய்திருந்தார்கள் என்றால் ஆமாம். தாவா சொத்தும் அதில் ஒரு சொத்து என்றால் ஆமாம். 192/1989 வழக்கு என் அப்பா அவர்களுக்கு எதிராக தாக்கல் செய்திருந்தார் என்றால் ஆமாம். என் அப்பாவுடைய சகோதரர் பெயர் என்ன என்றால் ஷாஜகான். என் அப்பாவின் சகோதரரும் அவருடைய மகனும் தாக்கல்செய்த 59/1987 வழக்கு விசாரணை நீதிமன்றத்தில் தள்ளுபடியாகிவிட்டது என்று சொன்னால் தெரியவில்லை. 2ஆம் பிரதிவாதிக்கு தாவா சொத்து சம்மந்தமாக கிரையம் செய்து கொடுத்தேன் என்றால் ஆமாம். அந்த பத்திரத்தில் பதிவு செய்யும்போது மேற்படி வழக்கு தீர்ப்பையும் இணைத்து பதிவு செய்துள்ளேன் என்றால் ஆமாம். 59/1987இல் தீர்ப்புக்கு எதிராக மேல்முறையீட்டு எண் 155/1991 தாக்கல்செய்தார்கள் என்றால் ஆமாம். மேற்படி வழக்கின் மேல்முறையீட்டில் பி அட்டவணை 7வது அயிட்டம் போக மற்றவற்றில் அவர்கள் கோரியுள்ள தீர்ப்பு கொடுத்துள்ளார்கள் என்றால் ஆமாம். பி அட்டவணையில் 7வது அயிட்டத்தை பொறுத்து மேல்முறையீடு தள்ளுபடியாகிவிட்டது என்றால் ஆமாம். 7வது அயிட்டம்தான் இந்த வழக்கின் தாவா சொத்து என்றால் இல்லை. வா.சா.ஆ.5தான் நான் 2ஆம் பிரதிவாதிக்கு எழுதிகொடுத்தது என்றால் ஆமாம். இந்த வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய விஷயங்கள் சொல்லி தயார் செய்து கையெழுத்து செய்து தாக்கல் செய்தேன் என்றால் ஆமாம். 59/1987 மேல்முறையீட்டு வழக்கு எண் 155/1991 வழக்குகளில் தாவா சொத்து உள்ளதா, இல்லையா என்றால் உள்ளது. எதை பொறுத்து அந்த மேல்முறையீடு தள்ளுபடியானது என்றால் அது எனக்கு தெரியவில்லை. என்னுடைய எதிர்வழக்குரையில் தாவா சொத்து எனக்கு சொந்தமான சொத்து என்று சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். தீர்ப்பை படித்து பார்க்கும்போது அவ்வாறு இல்லை. 7வது அயிட்டம் புல எண் 10/11 தாவா சொத்து என்றும், அதை பொறுத்து அ.வ எண்

59/1987இல் ஏற்பட்ட மேல்முறையீட்டில் 155/1991இல் உள்ள தாவா சொத்துதான் என்றால் எங்களுக்கும் என் சித்தப்பாவுக்கு பங்கு பிரிக்கவில்லை. 23.11.2009 என் தந்தை ஹ யாத்கான் எனக்கு எழுதி கொடுத்த ஆவணப்படி எனக்கு பாத்தியப்பட்ட அனுபவத்தில் உள்ள சொத்தை 2ஆம் பிரதிவாதிக்கு எழுதிகொடுப்பதாக வா.சா.ஆ.5இல் வாசகம் உள்ளது என்றால் ஆமாம். தாவா சொத்திற்கு உரிமையாளர் என்ற முறையில் நான் 2ஆம் பிரதிவாதிக்கு கிரையம் எழுதி கொடுத்துள்ளேன் என்றால் ஆமாம். என்னுடைய எதிர்வழக்குரையில் எனது அப்பா எழுதிகொடுத்த செட்டில்மெண்ட் பத்திரம் ஏற்புடையதல்ல என்று சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். என் அப்பா எழுதி கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரம் செல்லாது என்றால் நான் 2ஆம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்த கிரையமும் செல்லாது என்று சொன்னால் ஆமாம். வா.சா.ஆ.2 இல் உள்ள அப்துல் ஹக்கீம் என்கிற கையெழுத்து என்னுடையது என்றால் ஆமாம். சாட்சிகளாக மும்தாஜ், முகமதுகாசிம், ஹயாத்கான் ஆகியோர் கையெழுத்த செய்தள்ளார்கள் என்றால் ஆமாம், அவர்கள் என் குடும்பத்தார் என்றால் ஆமாம். வா.சா.ஆ.3 வாதி முருகானந்தத்திற்கு நான் எழுதி கொடுத்த பவர் பத்திரம் பதிவு செய்யபட்டது என்றால் ஆமாம். வா.சா.ஆ.3 பொது அதிகார பத்திரம் என்றால் ஒரு விஷயத்திற்குதான் கொடுத்தேன். என் எதிர்வழக்குரையில் பத்தி 4இல் மேல்முறையீடு வழக்கு எண் 155/1991, 156/1991 என் சித்தப்பாவும் அவரது மகனும் தாக்கல் செய்து முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் முடிவான மேல்முறையீட்டு வழக்குகளா என்றால் ஆமாம். இந்த மாதிரி மேல்முறையீட்டு வழக்குகளை எடுத்து நடத்துவதற்காக அதிகாரம் கொடுத்ததாக எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். பவர் பத்திரம் எழுதி கொடுத்தபோது எழுதாத வெள்ளை தாளில் கையெழுத்து வாங்கிகொண்டதாக சொல்லுகிறேனே அந்த நாள் நேரம் குறித்து எதுவும் சொல்லவில்லை என்றால் ஆமாம். 2ஆம் பிரதிவாதி பெயரில் தாவா சொத்து சம்மந்தமாக கிரையம் செய்து கொடுத்ததால் வாதிக்கு எழுதி கொடுத்ததாக தாவாவில் உள்ள கிரைய ஒப்பந்தபத்திரம் ஏற்ககூடியதல்ல என்று சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். 10.10.2019 இல் வாதி பாக்கி பணத்தை பெற்றுகொண்டு கிரைய ஒப்பந்தப்படி கிரையம் செய்து கொடுக்ககோரி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் ஆமாம். அதை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.அ வ எண் 29/2017 இவ்வழக்கின் 2ஆம் பிரதிவாதி எனக்கும் என் அப்பாவுக்கும் மற்றும் 5பேருக்கும் எதிராக தாக்கல் செய்திருந்தார் என்றால் ஆமாம். அவ்வழக்கில் 1.3.2023 இல் தீர்ப்பு வந்துவிட்டது என்றால் ஆமாம். அவ்வழக்கில் உள்ள சொத்து இவ்வழக்கின் தாவா சொத்து என்றால் ஆமாம். அவ்வழக்கு நிலுவையில் இருக்கும்போது வா.சா.ஆ.5 ஆவணத்தை 2ஆம் பிரதிவாதி எனகது அண்ணிக்கு நான் எழுதி கொடுத்ததால்

அதையே குறிப்பிட்டு அந்த வழக்கு எனது அண்ணிக்கு ஆதரவாக தீர்ப்பாகியுள்ளது என்றால் இல்லை. என்னிடம் காண்பிக்கபடும் தீர்ப்பு, தீர்ப்பாணை அந்த வழக்கில் ஏற்பட்டுள்ளது என்றால் அது வா.சா.ஆ.7, 8 ஆகும். முருகானந்த்திற்கு குடும்ப வழக்கிற்கு அணுகியதாக சொல்லியுள்ளேனே அதற்கு அவருக்கு என்ன பிரதிபிரயோஜனம் பேசினோம் என்றால் அவர் 2 சதவீதம் கேட்டார் அதற்கு நாங்களும் ஒப்புகொண்டோம். அவ்வாறு என்னுடைய எதிர்வழக்குரையிலும், பிரமாணவாக்குமூலத்திலோ எந்த வழக்கிலும் இதுவரை சொல்லவில்லை என்றால் ஆமாம் இன்றுதான் சொல்லியுள்ளேன். எனக்கு முகிலன் வழக்கறிஞரை தெரியுமா என்றால் தெரியும். வா.சா.ஆ.2 கிரைய ஒப்பந்தம் வழக்கறிஞர் முகிலன் அலுவலகத்தில் போய் எல்லோரும் கையெழுத்துபோட்டோம் என்றால் இல்லைரோட்டில் வைத்து கையெழுத்து வாங்கும்போதுதான் தெரியும். நான் வெளிநாட்டிலிருந்து வந்தபிறகு நான் என்ன வேலை பார்த்தேன் என்றால் ஒரு வழக்கறிஞருடன் இருந்து பார்த்து வேலை கற்றுகொண்டேன். நான் எந்த வழக்கறிஞரிடம் இருந்தேனோ அவரின் ஜீனியர்தான் முகிலன் என்றால் ஆமாம். சாட்சி கையொப்பம் போட்ட தம்பி, அம்மா, அப்பா முகிலன் வழக்கறிஞர் அலுவலகத்திற்கு போய் போட்டார்களா என்றால் இல்லை நான்தான் வாங்கிபோய் வாங்கி வந்தேன். நான் மட்டும் தான் போய் வாங்கினேனா என்றால் ஆமாம். என்னுடைய எதிர்வழக்குரையில் முருகானந்தம் என்னுடைய தம்பி, அம்மா, அப்பாவிடம் கையெழுத்து வாங்குவதாக சொல்லுவது தவறு என்றால் சரியல்ல. பொது அதிகார ஆவணத்திற்கும் விண் நிறுவனத்திடம் எனக்கு உள்ள பிரச்சனைக்கும் சம்மந்தமில்லை என்றால் ஆமாம். விண்புரோமோட்டார்ஸ் நிறுவன பிரச்சனைக்காகதான் முருகானந்தத்தை தொடர்பு கொண்டேனா என்றால் இல்லை 2வது பிரச்சனைதான் அது. முதல் பிரச்சனை குடும்ப வழக்கா என்றால் ஆமாம்.9.10.2019இல் முருகானந்தத்திற்கு கொடுத்த பொது அதிகாரத்தை ரத்து செய்துவிட்டேன் என்றால் ஆமாம். சுமார் 1 வருடம் 11 மாதம் கழித்து ரத்து செய்தேன் என்றால் ஆமாம். அவ்வாறு இருக்கும்போது அதன் பின்னிட்டு நான் எப்படி விண் புரோமோட்டர்ஸ் பிரச்சனைக்கு அவரிடம் போனேன் என்றால் பின்பு போகவில்லை அப்போதேதான். தாவா சொத்தின் மொத்த விஸ்தீர்ணம் எவ்வளவு என்றால் 3464 சதுரஅடி. அந்த சொத்து கல்யாணபுரம் 1ஆம் சேத்தி முகாசா கல்யாணபுரம் என்றால் ஆமாம். 2017இல் சொத்தின் மதிப்பு 35 லட்சம் என்றால் ஆமாம். 2019 இல் 2ஆம் பிரதிவாதிக்கு 4லட்சத்திற்கு ஒரு பகுதி கிரையமாகியுள்ளது என்றால் ஆமாம். சாகுல்ஹமீது, இமாம்அலி, ஆகிய இருவருக்கும் நன் மற்றொரு பகுதியை கிரையம் செய்து கொடுத்தேன் என்றால் ஆமாம். அது எவ்வளவுக்கு கிரையம் என்றால் 2014இல் 22 லட்சத்திற்கு கிரையம். சாகுல்ஹமீது, இமாம்அலி ஆகிய

இருவரும் 2ஆம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்துவிட்டார்களா என்றால் நானே தப்பு என்று உணர்ந்து கிரையம் வாங்கி கொடுத்துவிட்டேன். நான் 2ஆம் பிரதிவாதி கிரையம் செய்து கொடுத்த தேதியில்தான் சாகுல்ஹமீது, இமாம்அலி, ஆகியோரும் கிரையம் செய்து கொடுத்தார்கள் என்றால் ஆமாம். அது எவ்வளவு என்றால் கிரைய சாசனத்தொகை குறிப்பிடவில்லை. தாவா கிரைய ஒப்பந்தம் வா.சா.ஆ.2 நான் முருகானந்தத்திற்கு செய்து கொடுத்த கிரைய ஒப்பந்தம்தான் என்று சொன்னால் சரியல்ல. 16.11.2017 இல் முருகானந்தத்திடமிருந்து ரூபாய் 10லட்சம் முன்தொகை வாங்கியுள்ளேன் என்றால் இல்லை. வழக்கு நடத்துவதற்கு முருகானந்தம் என்னிடம் பணம் கேட்டு நான் பணம் கொடுத்துள்ளேன். நான் பணம் கொடுத்ததற்கு ஏதாவது எழுதி வாங்கியுள்ளேனா என்றால் நம்பிக்கைதான். 16.11.2017க்கு பிறகு அடுத்தநாளும் அதற்கடுத்தநாளும் 6லட்சம், 5 லட்சம் ரொக்கமாக பணமாக வாதி என்னிடம் கொடுத்துள்ளார் என்றால் இல்லை. கிரைய ஒப்பந்தத்திற்காக நான் அவரிடம் மொத்தம் 21லட்சம் வாங்கியுள்ளேன் என்றால் இல்லை. அதுதவிர வாதியிடமிருந்து கைகடனாக ரூபாய் 6லட்சம் வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. பி.சா.ஆ.2 பதில் அறிவிப்பில் இந்த வழக்கு சொத்து ஜலாலுதீனுக்கு சொந்தமான சொத்து என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் ஆமாம். AS 155/1991இல் ஜலாலுதீனுக்கு ஆதரவாக தாவா சொத்து சம்மந்தமாக தீர்ப்பானபோதிலும் 21.10.2019 பதில் அறிவிப்பில் தொல்லை கொடுப்பதற்காக பவர் ஏஜென்ட் நியமித்தாக சொல்லியுள்ளேன் என்றால் சாட்சி எதுவும் பதில் சொல்லவில்லை. எனக்கு முருகானந்தம் கொடுத்த அறிவிப்பு 10.10.2019, நான் பதில் கொடுத்தது 21.10.2019 அதற்கிடையில் 2ஆம் பிரதிவாதிக்கு 16.10.2019இல் கிரையம் எழுதி கொடுத்துவிட்டேன் என்றால் ஆமாம். என்னுடைய பதில் அறிவிப்பில் மேற்படி கிரையம் செய்து கொடுத்த விபரத்தை சொன்னேனா என்றால் இல்லை. முருகானந்தத்திற்கு சொத்து சம்மந்தமாக கிரையம் எழுதி கொடுக்ககூடாது என்பதற்காக 2ஆம் பிரதிவாதிக்கு அவசரமாக வா.சா.ஆ.5 ஐ எழுதி கொடுத்துவிட்டேன் என்றும் அது பெயரவில் ஏற்பட்ட ஒன்று என்றால் சரியல்ல. பதில் அறிவிப்பில் ஜலாலுதீன் குடும்பத்துடன் சமாதானமாக போய்விட்டேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் சொல்லியுள்ளேன். தாவா சொத்து தற்போது வரை வாதி முருகானந்தம் அனுபவத்தில் உள்ளது என்றால் இல்லை. அந்த இடத்தில் என்ன உள்ளது என்றால் ஒன்றுமில்லை காலியாக உள்ளது. வட்ட அலுவலகம், திருவையாறு வட்டாட்சியர் அமைதி பேச்சுவார்த்தைக்கு 21.12.2017அன்று நாங்கள் ஒருபக்கமும், பரகத்அலியை சேர்ந்தவர்கள் ஒரு பக்கமும் ஒரு அறிவிப்பு கொடுக்கபட்டது என்றால் ஆமாம். அந்த அறிவிப்பு தாவா சொத்து சம்மந்தமாக பேசதான் என்றால் ஆமாம். பரகத்அலி என்பவர் 2ஆம் பிரதிவாதியின் சகோதரர் என்றால்

ஆமாம். மேற்படி தேதிக்கு முன்பாகவே வாதி முருகானந்தத்திற்கு பொது அதிகாரம் கொடுத்துவிட்டேன் என்றால் ஆமாம். தற்போது என்னிடம் காட்டப்படுவதுதான் அந்த அறிவிப்பு என்றால் ஆமாம். அது **வா.சா.ஆ.9** ஆகும். தற்போது என்னிடம் காட்டப்படுவதுதான் தாவா சொத்து சம்மந்தமாக நான் காவல்கண்காணிப்பாளருக்கு அனுப்பிய புகார் நகல் என்றால் ஆமாம் அது **வா.சா.ஆ.10** ஆகும். தற்போது என்னிடம் காட்டப்படுவதுதான் மாநில ஆளுநர் தஞ்சாவூர் வந்தபோது தாவா சொத்து பிரச்சனை தொடர்பாக நான் கொடுத்த புகார் நகல்தான் என்றால் ஆமாம் அது **வா.சா.ஆ.11** ஆகும். தற்போது என்னிடம் காட்டப்படுவதுதான் நான் மாவட்ட ஆட்சியரிடம் கொடுத்த புகார் நகல் என்றால் ஆமாம். அது **வா.சா.ஆ.12** ஆகும். தற்போது என்னிடம் காட்டப்படுவதுதான் நான் வட்டாட்சியரிடம் கொடுத்த புகார் நகல் என்றால் ஆமாம். அது **வா.சா.ஆ.13** ஆகும். தாவா சொத்து சம்மந்தமாக வாதிக்கு கிரைய ஒப்பந்தம் செய்துவிட்டு தற்போது அவருக்கு கிரையம் செய்து கொடுக்ககூடாது என்று தவறாக கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல. தற்போது என்னிடம் காட்டப்படுவதுதான் முருகானந்தம் வாதி என்னுடைய வழக்கிற்காக அச்சடித்த நோட்டீஸ் என்றால் ஆமாம். அது **வா.சா.ஆ.14** ஆகும். கிரைய ஒப்பந்தத்திற்காக நான் 21 லட்சம் வாங்கியுள்ளேன் என்றும் வாதி மீதமுள்ள பணத்தை கொடுத்து கிரைய பத்திரத்தை பதிவு செய்துகொள்ள தயாராக இருந்தார் என்றும், நான்தான் 2ஆம் பிரதிவாதி குடும்பத்துடன் கூட்டு சேர்ந்து வாதிக்கு தாவா சொத்தை கிரையம் செய்துகொடுக்க கூடாது என்ற எண்ணத்தில் வாதிக்கு எதிராக பொய்கட்சி ஆடுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து சம்மந்தமாக முருகானந்தத்திற்கு கிரையம் செய்துகொடுப்பதற்காக சார்பதிவாளர் அலுவலகத்தை அணுகியபோது அரசு வழக்கறிஞரிடம் கருத்துரை பெற்றோம் என்றால் சரியல்ல. வாதிகோரியுள்ளபடி கிரையம் செய்துகொடுக்க கடமைபட்டவர் என்றால் சரியல்ல.

**நான் சொல்ல என் உத்திரவுப்படி தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.**

NAGARAJAN Digitally signed by NAGARAJAN Date: 2026.02.03 18:46:24 +0530

**2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**

**தஞ்சாவூர்.**